கிழக்கு மாகாணத்தின் திருகோணமலைக்கான அமெரிக்க அரசாங்கத்தின் உதவி குறித்துஅமெரிக்காவின் அரசியல்விவகாரங்களிற்கான கீழ் நிலைசெயலாளர் தோமஸ்சனோன் ஆற்றிய உரை-டிசம்பர் 15- 2015
நான் கிழக்கு மாகாண ஆளுநர்,தூதுவர் காரியவாசம்,எதிர்கட்சி தலைவர் மற்றும் முதலமைச்சரை நன்றியோடு ஏற்றுக்கொள்கிறேன்.

இது இலங்கைக்கான எனது முதல் விஜயம், தென்னாசியாவிற்கான முதல் விஜயம்,நாங்கள் நேற்று மாலையே இலங்கை வந்தடைந்தோம், இன்று காலை நான்கொழும்பில் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து சமுத்திரத்தை பார்ப்பது மிகவும் மகிழ்ச்சிகரமானதாக தோன்றியது, பின்னர் நாங்கள் அந்த அற்புதமான இடத்திற்கு ஹெலிக்கொப்டர் மூலம் சென்றோம், அங்கு செல்லும் வழியில் நான் அமெரிக்காவின் அரசியல்விவகாரங்களிற்கான கீழ் நிலைசெயலாளராக நியமிக்கப்படவிருப்பது குறித்த கௌரவத்திற்குரியவன் என்ற போதிலும், நான் வாழ்நாள் முழவதும் இந்த அழகிய நாட்டில் தங்குவதற்கு விரும்பலாம் என எண்ணினேன்.
மேன்தங்கிய அதிதிகளே, கனவாண்களே, பெண்மணிகளே,
இந்த ஹோட்டலில் இருப்பது மிகுந்த மகிழ்;ச்சியை அளிக்கின்றது,இலங்கையின் தொழில்முனைவோரின் தொலைநோக்கு மற்றும் கடினஉழைப்பையும்,எங்கள் யுஎஸ்எயிட்டின் தொழில்நுட்ப திறமையையும் இணைக்கும்போது என்ன சாத்தியம் என்பதற்கான சிறந்த உதாரணமிது.
ஆசியாவின் மிகவும் புராதானநகரங்களில் ஒன்றில் நீங்கள் இதனை விட சிறந்த இடத்தை ஹோட்டலிற்கு கண்டுபிடிப்பதற்கு நீங்கள் சிரமப்படக்கூடும்.பல ஆயிரம் வருடங்கள் வரலாற்று பெருமைகொண்டதாக இந்த நகரம் விளங்குகின்றது.நான் பார்த்ததில் மிகவும் அழகான கடற்கரைகளிற்கு அருகில் இது அமைந்துள்ளது.இந்த கூற்றுமிகவும் முக்கியமானது ஏனெனில் நான் கலிபோர்னியாவிலிருந்து வருகின்றேன்,உலகின் மிகநீண்ட இயற்கை துறைமுகத்திற்கு அருகில்.
இலங்கையில் சுற்றுலாத்துறைக்கு உள்ள சாதகதன்மையையும்,உங்கள் அழகான நிலப்பரப்புகளின் அற்புதத்தையும்,மக்களின் ஈடுஇணையற்ற விருந்துபசார பண்பையும், இணைக்கும்போது- ஆம் அது நிச்சயமாக அது அதிர்ச்சியை ஏற்படுத்தும் வெற்றிக்கான செயல்முறையாக காணப்படும்.இது இலங்கைக்கு விஜயம்மேற்கொள்பவர்களிற்கு மாத்திரம் முக்கியமானதாக அமையாது,அதனைவிட முக்கியமாக ஹோட்டல்களில் பணிபுரிபவர்கள்,அந்த வருமானம் மூலம் அவர்கள் ஆதரவளிக்கும் குடும்பங்கள்,மற்றும் உற்பத்திசெய்யப்படும் பொருளதார நன்மைகள் மூலம் நன்மையடையும் பலரிற்கும் இது முக்கியமானதாக காணப்படும்.

இலங்கைக்கு நான் விஜயம் மேற்கொண்டுள்ள இந்த இரு நாட்களில் இலங்கை மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த உள்ளூராட்சி அதிகாரிகள் சமூகங்கள்சிவில் அமைப்புகள் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை நேரடியாக பார்வையிடமுடிந்தமை குறித்து நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன்
உங்கள் நாடு சமூக மற்றும் பொருளாதார ரீதியில் சாதித்துள்ள விடயங்களால் நான் கவரப்பட்டுள்ளேன்.

அமெரிக்கா உங்களுடன் இணைந்து பணியாற்றுவது மற்றும் உங்களுடைய முன்னேற்றத்திற்கு உதவுவது குறித்து பெருமிதம்கொள்கின்றது.கடந்த 60 வருடங்களிற்கு மேலாக அமெரிக்காவின் வெளிநாட்டு உதவி இலங்கை மக்களில்இ அவர்களது சமூகங்களில் இருநாடுகளிற்கும் இடையிலான உறவுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.
எமது திட்டங்கள் இலங்கையின் பரந்துபட்ட பகுதிகளிலும் பலதரப்பட்ட துறைகளிலும் காணப்படுகின்றன விவசாய அபிவிருத்திசூழல்மற்றும் இயற்கை வளங்கள்சுகாதாரம்கல்வி ஜனநாயகம்
ஆட்சிமுறைபொருளாதார வளர்ச்சி மற்றும் மனிதாபிமான உதவி உட்பட பல துறைகளில்.
இந்த கூட்டாண்மை என்பது கடந்த ஆறு தசாப்தங்களில் குறிப்பிடத்தக்க விடயங்களை சாதித்துள்ளது: மலேரியாவை கட்டுப்படுத்துதல்புகையிரதப்பாதைகளை நவீனமயப்படுத்துதல்போசாக்கினை அதிகரித்தல்போன்ற பல.
இலங்கையில் பேரழிவை ஏற்படுத்திய 2004 சுனாமி தாக்கத்தின்போதுஇலங்கையை மீளகட்டியெழுப்புவதற்கு யுஎஸ் எயிட் உதவியதுஅறுகம்பை பாலத்தை மீன்பிடித்துறைமுகங்கள்தொழில் பயிற்சி நிலையங்கள்நீர் விநியோக அமைப்பு முறை என்பவற்றை திருத்துவதற்கு உதவியதுஅந்த பேரிடரினால் காவுகொள்ளப்பட்ட உயிர்களையும்அதனால் ஏற்பட்ட நிரந்தர அழிவுகளையும் எம்மால் மறக்கமுடியாத அதேவேளை எதிர்காலத்தை மீள கட்டியெழுப்புவதற்கான உங்களது துணிச்சலால் நாங்கள் கவரப்பட்டுள்ளோம்
இலங்கையின் மோதல்களின்போதும் அதன் பின்னரும் ஒரு மில்லியனிற்கு மேற்பட்ட மக்களிற்குஉணவு உறைவிடம்சுகாதாரம் உட்பட அவர்கள் உயிர்வாழ்வதற்கு அவசியமான உதவிகளை வழங்கியுள்ளோம்
இன்று காலை இங்கு குறிப்பிடத்தக்க கதைகளை தெரிவிக்ககூடிய அற்புதமான நபர்கள் இங்குள்ளனர் யுஎஸ்எயிட் இந்த ஓவ்வொரு கதைகளிலும் தனது பங்கை எவ்வாறு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.குறிப்பாக அங்கவீனர்களான ஆண்கள் பெண்களினது வாழ்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் விடயத்தில் அது முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளது.அவர்களால் தங்கள் வாழ்வாதராத்தை மீள கட்டியெழுப்ப முடிந்துள்ளது, அவர்கள் மீண்டும் துணிச்சலுடனும்,நம்பிக்கையுடனும் வாழ தொடங்கியுள்ளனர்.
அங்கவீனர்களிற்கான யுஎஸ்எயிட்டின் திட்டங்கள்,மக்கள் உயர் தரம்மிக்க புனர்வாழ்வு சேவைகளை பெற்றுக்கொள்ள உதவுகின்றன,இதன் மூலம் எங்களில் பலர் முக்கியத்துவத்தை உணரதவறிய நாளாந்த செயற்பாடுகளிற்கு அவர்களால் திரும்ப முடிகின்றது.
பார்வையாளர்கள் மத்தியில் திருகோணமலையை சேர்ந்த இளம் விவசாயிகள் சிலர் உள்ளர் இவர்கள் யுஎஸ்எயிட் அமைப்பிடமிருந்து நவீன விவசாயமுறைகளில், தொழில்நுட்பத்தில் உதவியை பெறுபவர்கள்,இந்த திறன்கள் அவர்களது உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதற்கு உதவுவதுடன்,அவர்களது வருமானத்தை அதிகரித்து அவர்களது சமூகத்தி பலப்படுத்தும்,மேலும் உள்ளுர் இளைஞர்களிற்கான முன்னுதாரணமாக விளங்கும்.

இன்று நான் ஆடைத்தொழிற்சாலைகளில் வேலைபுரியும் சில இளம் பெண்களுடன் உரையாடுவேன்,இந்த ஆடைத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு யுஎஸ்எயிட்ட உதவியது,நான் அவர்களுடைய வேலை, அவர்களால் அவர்களுடைய வருமானம் காரணமாக என்ன செய்ய முடிகின்றது,?அவர்களுடைய எதிர்கால திட்டங்கள் குறித்து அறிந்துகொள்வது பற்றி ஆர்வமாகவுள்ளேன்,குறிப்பாக பெண்களின் பொருளாதாரநிலை

வலுப்படுத்தப்பட்டு அவர்கள் தங்கள் கனவுகளை நோக்கி பயணம்செய்யும்போது என்னவெல்லாம் சாத்தியம் என்பதற்கான மனதை தொடும் உதாரணங்கள் இவை.

கடந்த 60 வருடங்களில் இலங்கை சாதித்துள்ள அற்புமான விடயங்களிற்கு நாங்களும் பங்களிப்பு செய்துள்ளோம் என்பது குறித்து நாங்கள் பெருமையடைகின்றோம்.மெரிக்கா தொடர்ந்தும் நீண்ட கால முன்னேற்றத்திற்கு அவசியமான விடயங்கள் குறித்து கவனம் செலுத்தும்,நாங்கள் சமநிலையானபொருளாதார வளர்ச்சி குறித்து கவனம் செலுத்துவோம் குறிப்பாக குறைந்த அபிவிருத்தியை கொண்டுள்ள பிரதேசங்களில்,அதிகளவு வேலைவாய்ப்பையும்,உயர்ந்த வருமானத்தையும் ஏற்படுத்துவோம்மேலும் நாங்கள் சிவில் சமூகத்தினர்பொதுமக்களுடன் மேலும் மேம்பட்ட விதத்தில் இணைந்து பணியாற்றுவோம்இதன் அர்த்தம் வலுவான நீதித்துறைவலுவான சிவில்சமூகம்அனைத்து இலங்கையர்களிற்கும் சேவையாற்றகூடிய செயற்திறன் மிக்க அரசாங்கம் ஆகியவையே இவற்றின் அர்த்தமாகும்
நாங்கள் தொடர்ந்தும் கிழக்கின் சமூகங்களிற்கு உதவிவழங்குவோம்நாங்கள் 3.2 பில்லியன் ருபாய்பெறுமதியான திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்,விளையாட்டு துறையில் மூன்று சமூகத்தினரையும் ஒன்றிணைக்கும் திட்டத்திற்கு நாங்கள் ஆதரவளிக்கின்றோம்.நாங்கள் அவர்களிற்கு ஆங்கில மொழி அறிவையும்,தொழில்முனைவிற்கான திறன்களையும் வழங்குகின்றோம்,மேலும்பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள்,பாலின அடிப்படையிலான வன்முறைகளை எவ்வாறு எதிர்கொள்வது போன்ற ஆலொசனைகளை வழங்குகின்றோம்.

கிழக்கில் நாங்கள் யுத்தத்தின் மிக மோசமான எச்சங்களாக உள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கும் உதவிவருகின்றோம்.மேலும் நாங்கள் யுத்தத்தினால் பாதிக்கபட்ட மக்களை குடியமர்த்தும் நடவடிக்கைகளிற்கும் உதவிவருகின்றோம்இதற்கான கூடாராங்கள் முதல்சுகதாரம் வரையான பல தரப்பட்ட சேவைகளை வழங்கிவருகின்றோம்

இது இதுவரை நீண்டதொரு பயணமாக உள்ளது  இன்னமும் பயணிக்கவேண்டிய தூரம் உள்ளது, இலங்கை மக்கள் சமாதானம் வளமை,நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தை தொடர்கையில் அமெரிக்கா உறுதியான விதத்தில் அதற்கு உதவும்
.இருநாடுகளினதும் மக்களிற்கு சிறந்த எதிர்காலத்தையும் சிறந்த வாழ்க்கையையும் இணைந்து உருவாக்கலாம்

நீங்கள் முன்னெடுத்துள்ள மிகப்பெரிய பணிக்காக நான் உங்களை பாராட்டுகின்றேன்இலங்கையில் என்ன நடைபெறுகின்றதோ அது சர்வதேச அளவில் எதிரொலிக்கும் உங்கள் நாட்டை மீள கட்டியெழுப்புவதிலும் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் நீங்கள் அடையும் வெற்றிஏனைய தற்சமயம் மோதலில் சிக்கியுள்ள,ஏனைய உலகிற்கு முன்னுதாரணமாக
அமையும்இந்த முயற்சிகளில் சகாவாக இருப்பது குறித்து அமெரிக்கா பெருமையடைகின்ற